**தலைப்பு 225 – இலங்கை பொலிஸ்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை பொலிஸின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் இலங்கை பொலிஸின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2022 ஜூன் 08 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் இலங்கை பொலிஸ் தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2022 ஜூலை 19 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ் அறிக்கையின் 1.6 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினை தவிர்த்து, 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான இலங்கை பொலிஸின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கை 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் இலங்கை பொலிஸினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் இலங்கை பொலிஸின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு இலங்கை பொலிஸின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளதாக.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் 2021 ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதி அல்லாத சொத்துக்கள் கூற்றில் ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் வருட இறுதியில் உள்ளவாறு பெறுமதி ACA - 6 படி ரூபா 52,247,996,562 தொகையாக காணப்பட்டதுடன், 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திறைசேரி சொத்துக்கள் அறிக்கையின் படி பெறுமதி ரூபா 51,491,465,387 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 756,531,175 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | இந்த வித்தியாசத்தை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இந்த வித்தியாசங்களை கண்டறிய வேண்டியிருந்ததுடன், விரைவாக சரி செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கட்டுப்பாட்டுக் கணக்கின் படி திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 779,845,975 தொகை ஆக காணப்பட்டதுடன், அத்திகதியில் உள்ளவாறு தனிப்பட்ட மீதிகளின் வகைப்படுத்தல் பொழிப்பின் மொத்தக் கூட்டுத்தொகை ரூபா 699,035,536 தொகையாக இருந்தது. அதன்படி ரூபா 80,810,439 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. இந்த வித்தியாசத்தை இனங்கண்டு தேவையான சீராக்கல்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த வித்தியாசத்தை வருடாந்தம் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கடன் மீதிகளை பதிவு செய்வதில் தவறுகள், கைவிடுகை தவறுகள் ஏற்பட்டுள்ளதுடன், 2015 ஆண்டு வரை 06 வருடங்களுக்குரிய இந்த கைவிடல் மற்றும் பிழையாக பதிவு செய்தல் என்பவற்றை இனங் கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.. | வித்தியாசங்களை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஈடுபாட்டுப் பொறுப்புக்களின் குறிப்பு (iv) படி மருத்துவ வழங்கல் பிரிவிற்கு தீர்க்கப்பட வேண்டியிருந்த பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 38,358,226 தொகை எனினும், நாரஹேன்பிடி பொலிஸ் மருத்துவ சேவைப் பிரிவின் பதிவேடுகளின் படி 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பொறுப்புக்களின் மீதி ரூபா 45,404,844 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 7,046,618 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | பதில் வழங்கியிருக்கவில்லை. | பொறுப்புக்கள் மிதியை சரியாக இனங் கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவுகள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 04 மூலதனச் செலவு விடயங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 891,580,000 தொகைக்கான மொத்த தேறிய ஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டிருந்தன. இந்த சேமிப்புக்களில் ரூபா 38,000,000 | ஜீப் வண்டிகள் கொள்வனவு செய்தல், பொலிஸ் கடமை நாய்கள் கொள்வனவு செய்தல் ஆகியவற்றிற்கான செலவுகள் சேமிக்கப்பட்டிருந்தது. | ஏற்பாடுகளை உச்சமட்ட வினைத்திறனுடன் பயன்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகைக்கான குறைநிரப்பு ஏற்பாடு ஒன்றும் காணப்பட்டது. | | |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியளவில் 02 வருடங்களை மிகைத்துள்ள வைப்புக் கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 232,581,722 தொகையாக இருந்தது. இவற்றில் 2013 ஆண்டில் சார்க் பயங்கரவாத போதைப்பொருள் குற்றங்களை அவதானிக்கும் மத்திய நிலையத்தை நிர்மாணிப்பதற்காக இந்தியாவில் இருந்து வழங்கியிருந்த ரூபா 11,503,192 இற்கான தொகை குறிப்பிட்ட கருமங்களை நிறைவேற்றாமல் 08 வருடங்களுக்கு மிகையான காலம் வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | 2013 ஆண்டில் நிறுவப்பட்டிருந்த தரவு முறைமையின் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக இந்த பணத்தை பயன்படுத்துவதாக இந்திய அரசிடன் அங்கீகாரம் கேட்டுள்ளதுடன், இதுவரை அங்கீகாரம் கிடைத்திருக்காமையால் இந்த மீதி வைப்புக் கணக்கில் காணப்படுகின்றது. | குறிப்பிட்ட குறிக்கோள்களுக்காக ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த இணக்கக் கூற்றிற்கு இணங்க மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக காணப்பட்ட 3,015 உத்தியோகத்தர்களிடம் அறவீடு செய்ய வேண்டியிருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 68,019,289 தொகையாக காணப்பட்டதுடன், அவற்றில் 05 வருடங்களுக்கு மிகையான காலம் நிலுவையாக காணப்பட்ட கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 46,756,018 தொகை ஆக இருந்தது. இந்த நிலுவையாக காணப்பட்ட கடன் மீதியை அறவீடு செய்வதற்காக தொடர் நடவடிக்கை பலவீன மட்டத்தில் காணப்பட்டது. | 2021 ஆண்டின் போது 05 வருடங்களுக்கு மிகையான நிலுவைத் தொகை மீதிகளில் ரூபா 5,637,218 தொகை அறவீடு செய்த பின்னர் வருட இறுதியில் உள்ளவாறு 05 வருடங்களை மிகைத்துள்ள நிலுவை கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 46,756,018 தொகையாக இருந்தது. | நிலுவை மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தை அடையப்பெறாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1865 இன் 16 ஆம் இலக்க பொலிஸ் கட்டளைச் சட்டத்தை திருத்துவதற்கான தேவைப்பாடு 2014 ஆம் ஆண்டில் | பொலிஸ் கட்டளைச் சட்டத்தை திருத்துவதற்கான முன்மொழியப்பட்ட வரைபு | இனங்காணப்பட்ட துறைகள் தொடர்பாக சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இனங்காணப்பட்டது. மாற்றங்கள் ஏற்படுத்த வேண்டிய 16 துறைகள் இனங் காணப்பட்டிருந்தது. நிகழ்கால மற்றும் எதிர்கால சமூக மற்றும் தொழிநுட்ப அபிவிருத்தி தேவைப்பாடுகளுக்கு பொருந்தக் கூடிய முறையில் நாளதுவரை ஆக்கப்பட்டு திருத்துவதற்காக 2014 நவம்பர் 19 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரமும் கிடைத்திருந்த போதிலும், 2022 மே மாதம் வரை சட்டம் திருத்தப்பட்டிருக்கவில்லை. | மற்றும் கருதுகோள் பத்திரம் 2022.04.10 திகதி அமைச்சிக்கு அனுப்பப்பட்டிருந்தது. | |
| (ஆ) | இலங்கை பொலிஸில் தற்போது காணப்படும் குறைபாடுகள் மற்றும் பலவீனங்களை இனங்கண்டு உரிய முறையில் நாளதுவரை ஆக்குவதற்கு முன்மொழிவுகள் சமர்ப்பிப்பதற்கும் எதிர்காலத்தில் சிறந்த மற்றும் செயற்திறனுடைய பொலிஸ் சேவை ஒன்றை நாட்டில் நிறுவுவதற்கு தேவையான திட்டங்கள் தயாரிக்கும் குறிக்கோளுடன் நிறுவப்பட்டிருந்த குழுவின் அறிக்கை ‘‘பொலிஸ் மறுசீரமைப்பு செயற்பாட்டுத் திட்டம்’’ என 2017 மே 31 திகதி வெளியிடப்பட்டிருந்த போதிலும் 2022 மே வரை செயற்படுத்தி இருக்கவில்லை. | பொலிஸ் மறுசீரமைப்புத் திட்டத்தை திருத்துவதற்காக குழு ஒன்று நியமிக்கப்பட்டிருந்ததுடன், அந்தக் குழு கூடி இந்த திருத்தங்கள் மேற்கொள்வதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | இனங்கண்டிருந்த மறுசீரமைப்பு அலுவல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | தண்டப் பணம் அறவீடு செய்வதை விரைவுபடுத்தலும் அரச வருமானத்திற்கு சேகரிக்கப்படும் தண்டப்பணத் தொகையை அதிகரிப்பதற்கும் பொது மக்களுக்கு தண்டப் பணம் செலுத்துவதை இலகுபடுத்தும் குறிக்கோளுடன் வாகன குற்றங்களுக்காக தன்னியக்க தண்டப்பண கொடுப்பனவு நடைமுறை ஒன்று நிறுவுவதற்காக 2014 ஆம் ஆண்டு முதல் திட்டமிடப்பட்டு வந்த போதிலும் 2022 ஜூன் வரை குறிப்பிட்ட முறைமை நிறுவப்பட்டிருக்கவில்லை. | ICTA நிறுவனத்தின் மூலம் தேவைப்பாட்டின் சிறப்பியல்கள் (Requirement) அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. தகைமையுடைய தரப்பினரை தெரிவு செய்யும் வரை தபால் திணைக்களத்திற்கு அங்கீகாரம் வழங்குதல் பொருத்தமானது என ஒன்றித்த அமைச்சரவை பத்திரம் ஒன்று சமர்ப்பிப்பதற்கு 22.05.04 திகதி தீர்மானிக்கப்பட்டது. | இனங்காணப்பட்ட குறிக்கோள்கள் நிறைவேற்றப்படக் கூடிய தன்னியக்க தண்ட பணம் செலுத்தும் நடைமுறை ஒன்று நிறுவுவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 2019 இன் 10 ஆம் இலக்க மோட்டார் வாகன (திருத்த) சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தியிருந்த மோட்டார் வாகன குற்றங்கள் மேற்கொள்ளப்படும் தவணைகளின் எண்ணிக்கை அடிப்படையில் தண்டப் பணம் அறவீடு செய்யும் முறைமை ஒன்று செயற்படுத்துதல் 2019 ஜூன் 20 திகதி முதல் செயற்படுத்தப்பட்டிருந்த போதிலும் வாகன குற்றங்கள் தொடர்பாக குற்றவாளிகள் ஒரே குற்றத்தை மேற்கொண்டுள்ள தவணைகளின் எண்ணிக்கை தெளிவாக இனங்காணக் கூடிய விதமான தரவுகளை கணனி மயப்படுத்தும் முறைமை ஒன்று இலங்கை பொலிஸினால் செயற்படுத்தப்படாமையால் ஒரே குற்றம் பல சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளும் குற்றவாளிகளிடம் சரியான தண்டப் பணத்தை அறவீடு செய்வதற்கு முடியாமல் இருந்தது. | ICTA நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட நடைமுறையின் மூலம் சரியான தண்டப்பணம் அறவீடு செய்யும் இயலுமை ஏற்படுகின்றது. குற்றம் அதிகரிக்கின்ற தவணைகளின் எண்ணிக்கையின் படி தண்டப்பணம் அறவீடு செய்யப்படாமையால் அரசாங்கத்திற்கு வருடாந்தம் கணிசமான நிதி நட்டமொன்று ஏற்படுகின்றதென அவதானிக்கப்பட்டது. | மோட்டார் வாகன போக்குவரத்து சட்டங்களை மீறக் கூடிய குற்றவாளிகள் அந்த குற்றத்தை மேற்கொள்ளும் தவணைகளின் எண்ணிக்கையை இனங்காணக் கூடியவாறு கணினி தரவு முறைமை நிறுவப்பட்டு அதன் படி குறிப்பிட்ட தண்டப் பணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 பெறுகைகள்**

---------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொலிஸ் சாஜென்ட் மற்றும் பொலிஸ் கொஸ்தாபில் உத்தியோகத்தர்களுக்காக 75,000 தொப்பிகள் ரூபா 93,455,119 தொகைக்கு கொள்வனவு செய்வதற்காக 2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த பெறுகை செயற்பாடுகளின் போது ஏற்பட்டிருந்த முறைசாரா விடயங்களின் காரணங்களினால் நடுத்தீர்ப்பின் போது 2017 ஜனவரி 21 ஆந் திகதி வழங்கியிருந்த தீர்ப்பு ஆகிய 75,000 தொப்பிகளுக்கான பணம் மற்றும் அதற்கான ஏனைய கட்டணங்களை செலுத்துதல் என்பவற்றை மறுத்து இலங்கை பொலிஸினால் தொடர்ச்சியாக நீதிமன்ற | கொடுப்பனவிற்காக தேவையான மேலதிக ஏற்பாடுகள் வழங்கப்படாமையால் தாமதத்தின் காரணமாக அரசிற்கு பாரிய கிரயம் ஒன்று மேற்கொள்ள நேரிடுகின்றதென குறிப்பிட்டு அமைச்சுச் செயலாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. | இந்த பெறுகை மற்றும் நடுவர் செயற்பாடுகள் குறைபாடுகள் காரணமாக அரசிற்கு மேற்கொள்ள வேண்டியிருந்த மேலதிக செலவுகள் தொடர்பாக பொறுப்புச் சொல்ல வேண்டியவர்களை இனங் காண்பதற்கு முறையான விசாரணை ஒன்று நடாத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தது. 2020 ஆகஸ்ட் மாதம் அளவில் இந்த தொப்பிகளை கொள்வனவு செய்வதற்காக ரூபா 191,768,632 தொகையும் ஏனைய கட்டணங்களாக ரூபா 45,316,880 தொகையும் செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2022 ஜூன் மாதம் அளவிலும் நீதிமன்ற அலுவல்கள் முடிவடைந்திருக்காததுடன் வழங்குனரின் களஞ்சிய கட்டணம், சட்டக் கட்டணம் மற்றும் செலாவணி விகிதாசாரத்தின் அதிகரிப்பின் நட்டம் என்பவை இலங்கை பொலிஸினால் பொறுப்பு எடுக்க வேண்டும் என வழங்குனர் கோரியிருந்தார். இது தொடர்பாக பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினர்களை இனங் காண்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஆ) | பொலிஸின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக புதிய ஜீப் வண்டிகள் கொள்வனவு செய்யும் தேவைப்பாடுகளை இனங்கண்டு 2018 ஆகஸ்ட 08 ஆந் திகதி அமப/18/1650/828/10-1 கொண்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் படி 750 ஜீப் வண்டிகள் (விஷேட கருமச் செயலணிக்காக 150 ஜீப் வண்டிகள் உட்பட) ரூபா 14,100 மில்லியன் தொகைக்கு இந்திய கடன் உதவித் திட்டத்தின் கீழ் (Indian Line Credit) கொள்வனவு செய்வதற்காக திட்டமிடப்பட்டிருந்தது. ஒரு வருடத்தில் 250 ஜீப் வண்டிகள் வீதம் 3 வருடங்களில் கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட பெறுகை அலுவல்கள் 2022 ஜூன் மாதம் வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த செயற்திட்டதிற்குரிய பெறுகை அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், இந்திய Exin வங்கியிலிருந்து வழங்கியிருந்த பரிந்துரைககளின் படி பெறுகை விலைகூறல் அழைப்பிற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்களை நிறைவேற்றிக்கெள்வதற்காக பெறுகை செய்முறை விரைவுபடுத்தவேண்டும். |
| (இ) | பொலிஸ் தலைமையகத்தின் புதிய செயலகக் கட்டிடத்தின் திருத்த வேலையொன்றின் காரணமாக அதன் சில பிரிவுகளை நடாத்திச் செல்வதற்காக 70,000 சதுர அடிகளைக் கொண்ட கட்டிடம் | கட்டிடத்திற்குரிய வரைபு தயாரிக்கும் போது வாகனங்களை நிருத்தி வைப்பதற்காக நவீன தொழில்நுட்ப முறைகள் பயன்படுத்தப்பட்டிருந்தது. | கட்டிடங்களை வாடகைக்கு பெறும் போது பொது வசதிகள் மற்றும் மாதாந்த மீண்டுவரும் செலவுகள் தொடர்பாக போதிய கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒன்று 02 வருடங்களுக்காக 2021 ஜனவரி மாதம் முதல் ரூபா 234,600,000 (Vat இன்றி) குத்தகைத் தொகையொன்றிற்கு பெறப்பட்டிருந்தது. இங்கு வாகனங்களை நிறுத்தி வைப்பதற்காக கட்டிடத்திற்கு வெளியே நிலப் பரப்பு காணப்படாததுடன் 06 மாடிகள் வாகனங்களை நிறுத்துவதற்காக பயன்படுத்தப்பட்டு வருவதுடன், குறிப்பிட்ட வாகனங்களை மேலும் கீழும் எடுத்துச் செல்வதற்காக மிகையான மின்சாரக் கிரயம் ஒன்று மேற்கொள்ள நேரிட்டிருந்தது. தரைமாடி உட்பட 03 மாடிகளின் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன், மேற்கொள்ளப்பட்டு வரும் மேலதிக நிர்மாண வேலைகளுக்காக கட்டிடத்தின் பொதுவான மின் வழங்கல் பயன்படுத்தப்பட்டிருந்தது. கட்டிடத்தின் பிரதான நுழைவாயில் 2022 மார்ச் மாத அளவிலும் பயன்படுத்த முடியாத நிலைமையில் காணப்பட்டதுடன், கட்டிடத்தின் குடிபுகுதல் சான்றிதழ் (COC) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தரை மாடியில் துணை மாடியொன்றும், மேல் மாடியையும் பயன்படுத்தக்கூடிய வகையிலும் தயாரித்துத் தரும் படியும் வேண்டப்பட்டமையால் உரிமையாளர் நடவடிக்கை எடுத்து வருகின்றார். திருத்த வேலை பூர்த்தி செய்யப்பட்டவுடனே பிரதான நுழைவாயிலை பயன்படுத்த முடியும். குடிபுகுதல் சான்றிதழ் பெற்றுத்தரும் படி உரிமையாளர் தரப்பிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | ஹபராதுவ "நிலசெவன" வீடமைப்புத் திட்டத்தில் இருந்து வீடொன்று ரூபா 3.8 மில்லியன் வீதம் ரூபா 729.6 மில்லியன் தொகைக்கு 192 வீடுகள் கொள்வனவு செய்வதற்காக 2017 திசெம்பர் 29 ஆந் திகதி உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2019 ஏப்ரல் 02 திகதியளவில் ரூபா 500 மில்லியன் தொகை முற்பணம் செலுத்தப்பட்டிருந்ததுடன், குறிப்பிட்ட பொது வசதிகளும் உட்பட 192 வீடுகளை உரித்தாக்கும் அலுவல்கள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | இந்த உடன்படிக்கைக்காக மூன்று தரப்பினர் தொடர்பு பட்டிருப்பதனால் இலங்கை பொலிஸ் இற்கு மாத்திரம் தீர்மானம் ஒன்று எடுக்க முடியாது. அமைச்சுச் செயலாளரின் ஆலோசனையின் படி தொடர் செயல் நடவடிக்கை எடுப்பதற்காக செயற்படுகின்றேன். | இந்த வீடுகள் உரித்தாக்குவதற்காக உடன்படிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (உ) | நாரஹேன்பிட பொலிஸ் போக்குவரத்துப் பிரிவின் பிரதான கராஜை வலையமைப்பு | பின்னர் விடை சமர்ப்பிக்கப்படும். | வாகன முகாமைத்துவ முறைமையின் மூலம் எதிர் பார்க்கப்பட்ட |

| | | |
|---|---|---|
| செய்வதற்காக வாகன முகாமைத்துவ முறைமை ஒன்று நிறுவுவதற்காக 2017 மார்ச் 17 திகதி ரூபா 12,297,829 இற்கான தொகையொன்றிற்கு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்ட நாள் முதல் 05 வருடம் கடந்திருந்த போதிலும், இந்த முறைமையின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட கருமத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கு முடியாமல் இருந்தது. | | குறிக்கோள்களை நெருங்குவதற்கு தாமதம் இன்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2008 மார்ச் 19 திகதிய உயர் பயிற்சி பொலிஸ் கல்லூரி மற்றும் இங்கிரிய பொலிஸ் நிலையம் நிர்மாணிப்பதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 2018 ஆண்டு இறுதி அளவில் ரூபா 8,895,273 தொகை செலவிடப்பட்டு இருந்த போதிலும் நிர்மாண வேலைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தது. 2008 ஆம் ஆண்டில் பொலிஸிற்கு உரித்தாக்கியிருந்த 06 ஏக்கர் கொண்ட இந்தக் காணியையும் தீர்த்துக் கொள்ளப்படாமல் காணப்பட்டது. | ருவன்புர அதிவேக பாதைக்காக காணியின் பகுதி ஒன்று வழங்குவதற்கு நேரிட்டிருந்தது. அதேபோல் இந்த செயற்திட்டத்தை முன்னெடுத்து செல்வதற்காக காணப்படும் இயலுமை தொடர்பாக விஷேடத்துவ அறிக்கையொன்று அழைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பிட்ட அறிக்கை கிடைத்த பின்னர் தொடர் நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளது. | உச்சமட்ட வினைத்திறனுடன் சொத்துக்கள் பயன்படுத்த வேண்டும். |
| (ஆ) | பொலிஸ் கல்வி நிறுவனம் ஒன்று நிறுவுவதற்காக மல்வானையில் அமைந்துள்ள 12 ஏக்கர் 01 ரூட் 8 பர்சஸ் காணி இலங்கை பொலிஸிற்கு உரித்தாக்குவதற்காக 2017 ஜூன் 20 திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2022 ஜூன் மாத அளவிலும் காணியை உரித்தாக்கியிருக்கவில்லை. | பின்னர் பதில் அனுப்புகின்றேன். | காணியை உரித்தாக்கல் விரைவாக பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சபுகஸ்கந்த பொலிஸ் நிலையம் அமைந்துள்ள 04 ஏக்கர் காணியில் சுமார் இரண்டு ஏக்கர் காணிப் பகுதி ஒன்று 1981 ஆண்டு முதல் குறைபயன்பாட்டுடன் காணப்பட்டது. | இந்த காணியில் பொலிஸ் மாஅதிபரின் களஞ்சியம் நிர்மாணிப்பதற்காக தேவையான திட்ட அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | உச்சமட்ட வினைதிறனுடன் சொத்துக்கள் பயன்படுத்த வேண்டும். |
| (ஈ) | நாரஹேன்பிடி பொலிஸ் வைத்தியசாலையை விரிவு படுத்துவதற்காக 2018 ஆண்டு இறுதி அளவில் ரூபா 334 மில்லியன் தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த 06 மாடிகளை கொண்ட கட்டிடத்தின் 04 மாடிகள் 2022 ஜுன் மாதம் வரை குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது. | போதியளவு பதவியணியினர் காணப்படாமையினால் இந்த கட்டிடம் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது. பதவியணி ஆட்சேர்ப்பு நடைபெற்ற பின்னர் புதிய கட்டிடத்தை முழுமையாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உச்சமட்ட வினைதிறனுடன் சொத்துக்கள் பயன்படுத்த வேண்டும். |

### 3.4 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது பெண்களுக்கு எதிராக அதிகார குற்ற சம்பவங்கள் 567 தொகை அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் வருட இறுதியில் உள்ளவாறு அவற்றில் 355 சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.<br>அறிவிக்கப்பட்டிருந்த அதிக எண்ணிக்கையான சம்பவங்கள் பெண்கள் கற்பழிப்பு, பாரதூரமான காயங்கள் ஏற்படுத்தல், ஆட்கொலைகள் தொடர்புடையவை ஆகும். அந்த குற்றச் செயல்கள் தொடர்பான சம்பவங்கள் முறையே 186, 194 மற்றும் 79 தொகையாக காணப்பட்டதுடன், தீர்த்தலின் சதவீதம் முறையே 43 சதவீதம், 35 சதவீதம் மற்றும் 30 சதவீத மட்டத்தில் காணப்பட்டது. ஆண்டின் போது பெண்களை கொலை செய்தல் சம்பவங்கள் 79 அறிவிக்கப்பட்டிருந்ததுடன் வருட இறுதியில் உள்ளவாறு 55 தொடர்ந்தும் விசாரணை மட்டத்தில் காணப்பட்டது. | தற்போது தீர்த்தலின் சதவீதம் இதை விட கூடிய பெறுமதி ஒன்றினை கொண்டிருந்தது. | பெண்களுக்கு எதிராக அதிகார குற்ற சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகள் பூர்த்தி செய்வதற்காக விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சிறுவர்களுக்கு எதிராக அதிகார குற்றச் சம்பவங்கள் 3,183 ஆண்டின் போது அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் 1,876 சம்பவங்கள் தொடர்பாக அதாவது 59 சதவீதத்திற்கான விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அவற்றில் அனேகமான சம்பவங்கள் பெண்கள் கற்பழிப்பு, கடத்தல் மற்றும் பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம் ஆகிய சம்பவங்கள் தொடர்பானவை என அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த குற்றச் செயல்கள் தொடர்பான சம்பவங்கள் முறையே 1,780, 611, மற்றும் 580 ஆகக் காணப்பட்டதுடன் தீர்த்தலின் சதவீதம் முறையே 44 சதவீதம், 30 சதவீதம் மற்றும் 43 சதவீதம் ஆகிய குறைந்த சதவீதத்தில் காணப்பட்டது. சிறுவர்களுக்கு எதிராக ஆட்கொலை தொடர்புடைய சம்பவங்கள் 27 அறிவிக்கப்பட்டிருந்ததுடன், வருட இறுதியில் உள்ளவாறு 19 சம்பவங்கள் மேலும் விசாரணை மட்டத்தில் காணப்பட்டது. | தற்போது தீர்த்தலின் சதவீதம் இதை விட கூடிய பெறுமதியினை பெற வேண்டும். | சிறுவர்களுக்கு எதிராக குற்றங்களை தீர்ப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | வாகனங்களைக் கட்டுப்படுத்தல் மற்றும் வீதிப் பாதுகாப்புப் தொடர்பாக பிரிவின் தகவல்களின் படி 2020 ஆண்டின் போது 2,242 பயங்கரமான வாகன விபத்துக்கள், 2021 ஆண்டின் போது 2,414 வரை அதிகரித்திருந்தது. அதற்கு நேரொப்ப இறந்தோர் எண்ணிக்கையும் 2,363 முதல் 2,513 வரை அதிகரித்திருந்தது. பயங்கரமான விபத்துக்களின் எண்ணிக்கை அந்த விபத்துக்களின் மூலம் இறந்த எண்ணிக்கை 100 இனை விஞ்சியுள்ள பொலிஸ் பிரிவுகள் அநுராதபுரம், குருநாகல், கம்பஹா, களனி மற்றும் நுகேகொடை பொலிஸ் பிரிவுகள் என 2021 ஆண்டிலும் அறிவித்திருந்தது. பயங்கரமான விபத்துக்களை குறைப்பதற்காக வேக வரையறை மிகைத்து வாகனங்கள் ஓட்டும் சாரதிகளை இனங் காண்பதற்காக தேவையான 25 வேக வரையறை பரிசோதனை கருவிகள் 2016 ஆண்டில் இறுதியாக | பதில் வழங்கியிருக்கவில்லை. | பயங்கரமான மற்றும் பாரிய விபத்துக்களை குறைப்பதற்காக அதற்கு தேவையான வசதிகளை பொலிஸ் நிலையங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அதில் 05 கருவிகள் மாத்திரம் இந்த ஐந்து பொலிஸ் பிரிவுகளுக்கு வழங்கப்பட்டிருந்தது. 2010 மற்றும் 2014 ஆண்டுகளின் போது கொள்வனவு செய்திருந்த வேக வரையறை கருவிகள் செயற்படாது அல்லது திருத்தம் மேற்கொள்ள வேண்டிய மட்டத்தில் காணப்பட்டமையால் வேக வரையறையை விட மிகையாக வாகனம் ஓட்டும் சாரதிகளை இனங் காணக்கூடிய கருமத்திற்காக போதியளவு கருவிகள் பொலிஸ் நிலையங்களில் காணப்படவில்லை. | | |
| (ஈ) | பொலிஸ் நிலையங்களில் மோட்டார் வாகன கடமைகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 8,772 தொகையாக காணப்பட்டதுடன், அவற்றில் மோட்டார் வாகன முகாமைத்துவ பயிற்சி நெறி கற்றுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 2,230 எனப்படும் 25 சதவீதம் மாத்திரமே. அவர்களில் இலங்கை பொலிஸின் அவசர அழைப்புப் பிரிவு, நகர போக்குவரத்துப் பிரிவு, கடுகதிப் பிரிவு மற்றும் வட்டார போக்குவரத்து மே.மா, வடக்கு/தெற்கு ஆகிய பிரிவுகளில் போக்குவரத்து கடமைகளில் ஈடுபட்டுள்ள மொத்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 1,947 ஆக காணப்பட்டதுடன், அவர்களில் 1,791 தொகை எனப்படும் 92 சதவீதம் சிரேஷ்ட/ கனிஷ்ட போக்குவரத்து முகாமைத்துவ பாடநெறியை கற்றிருக்கவில்லை. | பதில் வழங்கியிருக்கவில்லை. | போக்குவரத்து கடமைகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தருக்கு தேவையான பயிற்சி வழங்கல்கள் மேற்கொள்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | பொலிஸ் பயிற்சி நிறுவனச் சட்டத்தின் V பகுதியில் அடங்கியுள்ள ''பணம்'' தொடர்பான அலுவல்களுக்குரிய ''தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவனத்தின் நிதியம்'' நிறுவுதல் மற்றும் சட்டத்தின் அதற்குரிய 22 முதல் 28 வரையான கருமங்கள், செய்பணிகள் நடைபெற்றிருக்கவில்லை. | நிதியத்தை நிறுவுவதற்காக தேவையான ஏற்பாடுகள் ஒதுக்கிக்கொள்வதற்காக விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. | நிதியத்தை நிறுவி உரிய விதிமுறைகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோளை நெருங்குதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டு ''நிகழ்ச்சி நிரலின்'' பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களினாலும் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன், இலங்கை பொலிஸ் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் 04 இன் கீழ் 08 இலக்குகள் இனங்கண்டிருந்தது. அடிப்படை ஆண்டாக 2016 பயன்படுத்தி குறிகாட்டிகளை கட்டியெழுப்புதல் மேற்கொள்ளப்பட்டுக் காணப்பட்ட போதிலும், நிலைபேறான அபிவிருத்தி இலக்கை நெருங்கும் போது குறிப்பிட்ட கருமங்களை ஒழுங்குருத்துவதற்காக தேவையான திருப்புமுனைகளை இனங் கண்டிருக்கவில்லை. | இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள் தொடர்பாக ஆழமாக ஆய்வொன்று மேற்கொள்ள வேண்டியிருந்தமையால் அதற்காக அறிஞர் குழுவொன்று நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | தேவையான திருப்பு முனைகளை இனங்கண்டு ஒழுங்குறுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்கான அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 169 காணப்பட்ட போதிலும், பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்காக அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 162 தொகை காணப்பட்டமையால் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்கு பதவியுயர்வு செய்யும் போது தகைமையுடையவர்களை தெரிவு செய்தலில் பாதிப்பொன்றாக உள்ளதென அவதானிக்கப்பட்டது. | சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்காக பதவியுயர்வு செய்யும் போது அந்த பதவியில் காணப்படும் வெற்றிட எண்ணிக்கைக்கு மாத்திரம் பதவியுயர்வு வழங்கப்படுவதனால் தகைமையுடையோர் தெரிவு செய்யும் போது அது பாதிப்பொன்றல்ல. | பதவியணிப் படிநிலையை முறைப் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். |
| (ஆ) | மகளிர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்காக அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 13 ஆக காணப்பட்ட போதிலும், மகளிர் பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்காக அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 04 ஆக | மகளிர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்கு பதவியுயர்வு செய்யும் போது அந்த பதவியில் காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு மாத்திரம் பதவியுயர்வு | அங்கீகரிக்கப்பட்ட பதவியணிப் படிநிலையை முறைப் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்டமையால் மகளிர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்காக பதவியுயர்வு செய்யும் போது தகுதியுடையோர் தெரிவு செய்வதில் பாதகம் ஒன்று உள்ளதென அவதானிக்கப்பட்டது. | வழங்கப்படுவதனால் அது பாதிப்பொன்று அல்ல. | |
| (இ) | பொலிஸ் கொஸ்தாபல் பதவியில் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 60,000 ஆக காணப்பட்ட போதிலும், காணப்படும் 27,553 வெற்றிடங்களில் வகிப்பவருக்கு தனிப்பட்ட முறை என்ற வகையில் பொலிஸ் சார்ஜன் பதவிகளுக்கு பதவியுயர்வு செய்யப்பட்டுள்ள 10,856 மிகையை குறைத்த பின்னரும் 16,697 வெற்றிடங்கள் காணப்பட்டன. 2022 ஆண்டின் போது 3,934 தொகை ஆட்சேர்க்கப்பட்டிருந்தது. அதன்படி, பொலிஸ் கொஸ்தாபல் பதவிகளின் வெற்றிடங்களின் சதவீதம் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கைகளில் 18 சதவீதமாக காணப்பட்டமையால் இலங்கை பொலிஸின் நாளாந்த கடமைகளை ஆற்றுவதற்கு அவை பாதகமாக உள்ளன. | 2022 ஆண்டின் போது 3,934 பொலிஸ் கொஸ்தாபல் ஆட்சேர்க்கப்பட்டு ஆரம்ப பயிற்சி வழங்கல் பெற்றுக்கொண்டிருக்கின்றன.<br>அதன்படி, வெற்றிட சதவீதம் 28% இல் இருந்து 18% வரை குறைக்கப்பட்டுள்ளன. | வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு உரிய காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொலிஸில் உதவிச் சேவையின் சிரேஷ்ட மட்டத்தை சேர்ந்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் இரண்டு பதவிகளும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் 100 பதவிகளில் 93 உம் 2021 திசெம்பர் 31 திகதி அளவிலும் வெற்றிடமாக காணப்பட்டமையால் உதவிச் சேவை சிரேஷ்ட மட்டம் செயற்படாமல் காணப்பட்டது. | ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறைகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளனர். பயிலுனர் உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | உதவிச் சேவை சிரேஷ்ட மட்ட நியமனங்கள் உரிய காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (உ) | உதவிச் சேவை மூன்றாம் தரத்தின் 524 பதவிகளில் 281 உம், இரண்டாம் மட்டப் பதவிகள் 2,296 பதவிகளில் 1,255 உம் 2021 திசெம்பர் 31 திகதியுள்ளவாறு வெற்றிடமாக காணப்படல், பொலிஸ் மருத்துவப் பிரிவு, கட்டிடப் பிரிவு, தகவல் தொழில்நுட்பப் பிரிவு உட்பட பிரிவுகள் மற்றும் பொலிஸ் நிலையங்களின் கடமைகள் நடாத்திச் செல்வதற்கு பாதகமாக உள்ளது. | 2022 ஆண்டின் போது மூன்றாம் மட்டத்தின் வெற்றிடங்கள் 253 வரை குறைக்கப்பட்டுள்ளது. மீதியான வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | உதவிச் சேவை இரண்டாம் மட்டம், மூன்றாம் மட்டங்களின் நியமனங்கள் உரிய காலத்தில் நிறைவேற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | சிவில் பதவியணியில் அங்கீகரிக்கப்பட்டிருக்காத அமைய/ தற்காலிக ஊழியர் பதவியில் 13 பேர் சேவையாற்றுகின்றனர். | இந்த 13 பேர் தொடர்பான தகைமைகள் பற்றி அறிவித்து பதவிகளை நிரந்தரப்படுத்துவதற்காக பொதுத் துறை, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உட்படுத்துவதற்காக நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்பட வேண்டும். |